# மின்நிலா

நவம்பர் 16, 2020



engalblog.blogspot.com

எங்கள் ப்ளாக் பதிவுகளின் வாராந்திர தொகுப்பும், மற்றும் சில சுவையான பகுதிகளும், படங்களும் …

இந்த மின்நிலா புத்தகத்தைப் பற்றிய உங்கள் கருத்துகளையும், யோசனைகளையும் …

engalblog@gmail.com

என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். நன்றி.

**Layout by : KGG :**

=============


**ஆசிரியர்கள் :**

**B SRIRAM**

**K G GOUTHAMAN**

**KAYJEE**

**K G Y RAMAN**

**K S**



மின்நிலா 025 (முந்தைய இதழ் சுட்டி)

# பொருளடக்கம் பக்கம் எண்

அடைகுடைமிளகாய்! (ஸ்டஃப்ட் கேப்ஸிகம்) ஸ்ரீராம்.................2
கேள்வி பதில்கள்.........................................................................................8
எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள் ................................ 12
சௌக்கியமா? ஸ்ரீராம்...........................................................................14
பாட்டும் பதமும் :: ஸ்ரீராம்.................................................................. 22
நேர்மறை செய்திகள்.......................................................................... 26
மைசூர் காட்சிகள் மேலும் சில.......................................................... 40

குறிப்பு :

நீல நிறத்தில் காணப்படும் தலைப்புகள் கொண்டவை இந்த மின்நிலா இதழில் மட்டும் வெளியிடப்படுபவை. மற்றவை அனைத்தும் சென்ற வார எங்கள் பிளாக் வலைப்பூவில் வெளியிடப்பட்டவை.

# அடைகுடைமிளகாய்! (ஸ்டஃப்ட் கேப்ஸிகம்) ஸ்ரீராம்

லாக்டவுன் காலங்களில் ஒருநாள் செய்த ஒரு பக்கப்பண்டம்! அதுதாங்க ஸைட் டிஷ்!

அடை குடைமிளகாய் என்று தமிழ்ப் 'படுத்தி'யிருப்பது போலதான் இதுவும்! இது எல்லோரும் விதம் விதமாக நிறைய செய்கிறார்கள் என்று கேட்டு, பார்த்து, நானும் ஒருமுறை செய்து பார்க்க (சாப்பிட) ஆசை கொண்டேன்!

கீதா ரெங்கனிடமும் டிப்ஸ் கேட்டுக்கொண்டு, என் மாமாவின் மருமகளிடமும் டிப்ஸ் கேட்டுக்கொண்டு ஒருநாள் முயற்சித்தது இது.

உள்ளே என்ன அடைப்பது என்பதில் நிறைய விருப்பங்கள், ஆப்ஷன்ஸ் இருந்தாலும் வீட்டில் எது இருக்கோ அதை வைத்தும், எது கொஞ்சம் சுலபமோ அதை வைத்தும் செய்தது!

உருளைக்கிழங்கை வேகவைத்து எடுத்து சிறுதுண்டங்களாக்கிக் கொண்டு வெங்காயம் நறுக்கிக்கொண்டு, பூண்டு பத்தைகளை முந்திரிப்பருப்பு போல சைஸ் செய்து கொண்டு, கேரட் துருவிக் கொண்டு, அப்புறம் என்ன இருக்கு என்று பார்த்து பீன்ஸ் கண்ணில் படவும் அதையும் நறுக்கிச் சேர்த்துக் கொண்டு....



புதினா இருக்கிறதா என்று பார்த்து, அது இல்லாமல், கறிவேப்பிலை, கொத்துமல்லி எடுத்து வைத்துக் கொண்டு. . .



பிரெட் துண்டங்களை வறுத்து எடுத்துக்கொண்டு...



பிரெட் தவிர எல்லாவற்றையும் வதக்கி, தனியாக வைத்து....



குடைமிளகாயை எடுத்து மேலே நறுக்கி, உள்ளிருப்பதைக் காலி செய்து கப் ரெடி செய்துகொண்டு..



அதை ’அவனி’ல் (அவனுக்கு தமிழ் என்ன?!!) வைத்து, கொஞ்சம் வதக்கிக்கொண்டு...




வெளியே எடுத்து, அதில் அந்த கலவையை நிரப்பி...



நறுக்கி வைத்திருந்த மூடிகளை அதன் மீது வைத்து ஜாக்கிரதையாய் மூடி..



ப்ரெஷர் பானில் வைத்து அவ்வப்போது திருப்பி, நன்றாய் வதங்கவைத்து,




வெளியில் எடுத்து, மேலே பிரெட் துண்டுகளை வைத்து (முன்பே உள்ளேயும் ஒரு லேயர் வைத்திருக்கிறேன்)



சாப்பிடத் தயாரானோம். அதனுடன் சாதத்தில் கலந்து சாப்பிட வெங்காய வெந்தயக்குழம்பு.



நாங்கள் சாப்பிட்டு விட்டு கண்டுபிடித்ததை, என் மாமாவின் மருமகள் படம் பார்த்தே கண்டுபிடித்தார்.

"மிளகாய் இன்னும் கூட கொஞ்சம் வெந்திருக்கவேண்டும் அண்ணா.."

ஆனாலும் மோசமில்லை! நன்றாகவே இருந்தது.

[மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்]

# கேள்வி பதில்கள்

உங்களுக்குப் பிடித்த எழுத்தாளர் யார்? ஏன்?

பானுமதி வெங்கடேஸ்வரன்:

இப்போதய இளம் தலைமுறையினர் சிலர் குழந்தைகளை பெற்று வளர்ப்பதெல்லாம் தேவையில்லாத பெரும் சுமை எனவே குழந்தை பெற்றுக் கொள்வதை தவிர்க்கிறார்களே? கொடி காயை பாரமாக நினைக்கத் தொடங்கி விட்டதா? இவ்வளவு சுயநலமாகி விட்டோமா?

# அப்படியெல்லாம் பரவலாக குழந்தை வேண்டாம் என நினைப்போர் இருக்க வாய்ப்பில்லை.

எக்காலத்திலும் எல்லா மாதிரியும் சிலர் இருக்கலாம். அது பொது விதியாகக் கொள்ள இடமில்லை.

& >>>>>> VIDEO LINK <<<<<<<<

தன்னை ஒரு இந்தியனாக கருதாத, பாகிஸ்தான் ஆதரவாளரான, இந்திய எதிர்ப்பாளரான கமலா ஹாரிஸ் வெற்றியை கொண்டாட நமக்கு என்ன இருக்கிறது?

# ஏதும் இல்லை தான். அவர் தாய் வழி இந்தியா என்பதில் கொண்டாட ஒன்றுமில்லை.

& ஏதோ ஊடகங்களுக்கு மெல்லுவதற்கு கொஞ்சம் அவல். அம்புட்டுதான்.

சுந்தரமூர்த்தி நாயனார் இரண்டு பெண்களை மணந்து கொண்டாலும் அவருடைய முதல் திருமணம் நடைபெறாமல் சிவபெருமானால் தடுக்கப் பட்டது. அந்தப்பெண் என்னவானார்?

# சிவபெருமானே தடுத்தாட்கொண்டதால் அந்தப் பெண் வேறு நல்ல இடத்தில் வாழ்க்கைப் பட்டு சௌக்கியமாக இருந்தார் என்றெண்ணி மகிழ்வோம் !

& திருமணத்தினை தடுத்து, சுந்தரரை அழைத்துவந்த சிவபெருமானே, சுந்தரருக்கு பரவையார், சங்கிலியார் என்ற பெண்களைத் திருமணம் செய்துவைத்தார். ஆக -

ஒற்றைத் தலைவலி வேண்டாம்; இரட்டைத் தலைவலியால்  அவதிப்படு என்று சுந்தரருக்கு சாபம் போலிருக்கு!

கீதா சாம்பசிவம் :

சுப்ரபாதம், சஹஸ்ரநாமம், லலிதா சஹஸ்ரநாமம் போன்றவற்றின் தமிழ் மொழி பெயர்ப்பு சாந்நித்தியத்தோடு அமையவில்லை என்கிறோம். ஆனால் அதே மனம் கந்த சஷ்டி கவசம், அபிராமி அந்தாதி, பிரபந்தங்கள், தேவாரப் பாசுரங்கள், திருப்புகழ் போன்றவற்றை ஏற்கின்றதே!அது ஏன்? என்ன காரணம்?

# எந்த ஸ்தோத்திரம் ஆனாலும் அது இயற்றப்பட்ட மொழியில் மேன்மை பெற்று விளங்கும்.  பெயர்ப்பில் நீர்த்துப் போகும். மொழி இரண்டும் அறியாதோருக்கு மட்டும் இரண்டும் ஒன்றாகத் தோன்றும்.

இது தவிர, மொழிக்கான நாத காம்பீர்யம் சில மொழிகளில் நம் சூழலைப் பொருத்து சிறப்பாகத் தோன்றும்.

இணையம் அறிமுகம் ஆனதில் இருந்து தமிழ் நாட்டில் எழுத்தாளர்களும் அதிகம் ஆகி விட்டார்கள். உங்களுக்குப் பிடித்த எழுத்தாளர் யார்? ஏன்?

# பிடித்த எழுத்தாளர்கள் சற்று நீண்ட பட்டியல்.
லா.ச.ரா ஜானகிராமன் கல்கி வண்ணநிலவன் நாஞ்சில் நாடன் ரகுநாதன் சுஜாதா ..
ஏன் என்று கேட்டால் எழுதியது நம் நெஞ்சை வருட வேண்டும். அட வாஸ்தவம் தான் என எண்ணி வியக்கச் செய்யவேண்டும் . வாய் விட்டு சிரிக்க வைக்க வேண்டும்...

& எனக்குப் பிடித்த எழுத்தாளர் என்று பார்த்தால் சென்ற நூற்றாண்டில் சுஜாதா. இந்த நூற்றாண்டில் வெங்கட் நாகராஜ், என் சொக்கன்.

எழுத்தாளரை தெய்வமாகப் பார்க்கும் வழக்கம் உண்டா? அவரும் நம்மைப் போல் தான் என நினைப்பீர்களா?

# எழுத்தாளர் ரசனைக்குரியவர் ஆராதனைக்கல்ல.

& தெய்வமாக எல்லாம் பார்ப்பது சரியல்ல. ஒவ்வொருவரிடமும் + மற்றும் - qualities இருக்கும்.

ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு ரசனை உண்டு. இல்லையா? ஆகையால் ஒருவரின் எழுத்தில் நீங்கள் ரசிப்பதையே நானும் ரசிக்க வேண்டும் என எதிர்பார்ப்பது சரியா?

# ரசனை திணிக்க இயலாதது.

& நிச்சயமாக சரியில்லை.

ஹிஹி, இங்கே கே.வா.போ.க. பகுதியில் எழுதுபவர்களில் உங்களுக்குப் பிடித்த எழுத்தாளர் யார்? ஹையா, மாட்டி விட்டேனே! மாட்டிக் கொண்டாரே!

# எங்கள் எழுத்தாளர் கள் எல்லாரும் ஏதோ ஒரு வகையில் பிடித்தவர்கள்தாம்.

& குரோம்பேட்டை குறும்பன் ( இஃகி - இஃகி - நானாவது மாட்டுவதாவது! )

நீங்கள் எழுதும் ஒரு சம்பவம் மூலம் அதன் தொடர்பாக என் அனுபவம் அல்லது மற்ற வாசகர்களுக்கும் அவர்கள் அனுபவங்கள் நினைவுக்கு வருவது சரியா? தப்பா?

# சரி.

& தப்பே இல்லை.

இப்போ சீரியசாக ஒரு கேள்வி. தமிழில் உங்களைக் கவர்ந்த/பிடித்த எழுத்தாளர் யார்? வெகுஜன எழுத்தாளர் என்பதற்கான வரைமுறை ஏதானும் உண்டா?

& சுஜாதா. வரைமுறைகள் எல்லாம் வகுத்துக்கொள்ளாமல் புதுமைப் படைப்புகள் படைக்கும் ஆற்றல் சிலருக்கு மட்டுமே உள்ளது.

நீங்கள் ரசித்துப் படித்த தமிழ் நாவல்/சிறுகதை எது? யார் எழுதினது? ஏன் பிடிக்கும்?

# ரசித்துப் படித்தது நீண்ட பட்டியலாகிவிடும்.
ஏன் பிடிக்கிறது என்பதற்கு பதில் மேலே இருக்கிறது.

& சின்ன வயதில் படித்த வாஷிங்டனில் திருமணம். சாவி. அப்புறம் தேவன் எழுதிய சில கதைகள். உடல், பொருள், ஆனந்தி - ஜாவர் சீதாராமன், மூவிரண்டு ஏழு - ரா கி ரங்கராஜன் - எல்லாம் உடனே ஞாபகம் வருகின்றன.

ஒரு பக்கம் பொன்னியின் செல்வன் பிரமாதமாகப் பேசப்பட்டாலும் இன்னொரு பக்கம் கல்கியையும் அவர் எழுத்தையும் விமரிசிப்பவர்கள் உண்டு. அதைப் பற்றி நீங்கள் சொல்வது என்ன?

**சரித்திரக் கதை எழுத்தாளர்களில் சிறந்தவர் யார்?**

**# சரித்திரக்கதை என்றால் கல்கிதான். நிச்சயம் சாண்டில்யன் பாலகுமாரன் அகிலன் அல்ல.**

**நெல்லைத்தமிழன் :**

**கொரோனா தடுப்பூசி 90 சதவிகிதம் வெற்றி என்று ஒரு மருந்து நிறுவனம் சொல்லியிருக்கிறதே. 90 சதவிகிதம் வெற்றின்னா என்ன? ஊசி உடம்புல போகுது, மருந்தை உள்ளே செலுத்த முடியுது, ஊசியை திரும்ப வெளில எடுக்க முடியுது என்பதா?**

**# தடுப்பு ஊசி தயார் செய்வது எளிதல்ல. பற்பல சோதனைகளுக்குப் பின்தான் வெளியிட வேண்டும். சோதனைகள் 90 % சரியாக இருந்தன என்று கொள்ளலாம்.**

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

## எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள்




**LINK : INDIA :** https://www.amazon.in/dp/B08BYVY5C3
US : https://www.amazon.com/dp/B08BYVY5C3
UK : https://www.amazon.co.uk/dp/B08BYVY5C3




LINK : INDIA : https://www.amazon.in/dp/B08C2ZGBYJ
US : https://www.amazon.com/dp/B08C2ZGBYJ
UK : https://www.amazon.co.uk/dp/B08C2ZGBYJ




**LINK :**

**INDIA :** https://www.amazon.in/dp/B08CXBPPYN

**US :** https://www.amazon.com/dp/B08CXBPPYN

**UK :**https://www.amazon.co.uk/dp/B08CXBPPYN

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

# சௌக்கியமா? ஸ்ரீராம்

"நல்லா இருக்கீங்களா?
ஹலோ... எப்படி இருக்கீங்க?

"பார்த்து நாளாச்சு?" ஹவ் ஆர் யூ?"

இதெல்லாம் நாம் யாரையாவது சந்திக்கும்போதோ, நம்மை யாராவது சந்திக்கும்போதோ ஆரம்பிக்கும் உரையாடல். மிகவும் சம்பிரதாயமான உரையாடல்தான் இது.

பெரும்பாலும் இதற்கு "நான் நல்லாருக்கேன்... நீங்க எப்படி இருக்கீங்க?' என்றுதான் பதில் சொல்வோம் / வரும். அதுதான் முறையும் கூட.

சிலர் இருக்கிறார்கள். இந்தக் கேள்விக்காகவே காத்திருந்தது மாதிரி "அதை ஏன் கேட்கறீங்க? இரண்டு நாளா இடுப்பு வலி... மூன்று நாளா முதுகு வலி..." என்று தொடங்கி விடுவார்கள். உரையாடலை வேறு திசையில் கொண்டு போக முடியுமா என்ன? நெடுநாட்களுக்குப் பின் சந்தித்தவர் வேறு ஒன்றும் பேசமுடியாமல் இதையே (சங்கடத்துடன்) தொடர வேண்டியிருக்கும்.

அருகிலிருப்பவர்கள் சங்கடத்துடன் நெளிந்தாலோ, ஏதாவது சொன்னாலோ "இதில் என்ன இருக்கு? அவர் கஷ்டத்தைச் சொல்றார்... சொல்லுங்க நீங்க.." என்று ஊக்குவிப்பவர்களும் இருக்கிறார்கள்.

என்னுடன் பணிபுரிந்த பெண்மணி ஒருவர் இருந்தார். அவர் பல வருடங்களுக்கு முன்னரே ஓய்வு பெற்று அந்தமான் சென்று விட்டார். சமீபத்தில் வெங்கட் அந்தமான் பயணக்கட்டுரை எழுதியபோது கூட எனக்கு அவர் ஞாபகம்தான் வந்தது. அவர் பெயருக்கும் குணத்துக்கும் சம்பந்தமே இருக்காது.

அவரிடம் யாரும் 'எப்படி இருக்கீங்க?' என்று கேட்கக் கூட வேண்டாம். தினசரி காலை முகமன் கூறும்போதே தொடங்கி விடுவார். "இந்தக் குறுக்கு வலி போகவே மாட்டேங்குது தம்பி..."

ஒரு நாளைக்கு ஒரு வியாதி. இவரின் இன்னொரு வழக்கம் எந்தெந்த வங்கியில் கடன் கிடைக்குமோ, அந்தந்த வங்கியிலிருந்தெல்லாம் கடன் வாங்கியிருந்தார். திரும்பிக் கொடுத்ததாய் இன்றுவரை சரித்திரமில்லை. எப்படிதான் விசாரிக்காமல் கொடுத்தார்களோ! இப்போதும் அவர் அட்ரஸ் கேட்டு தபால்கள் வந்த வண்ணம் உள்ளன!

சில இடங்களில் தன்னிடம் யாரும் அதிகம் பேசுவதில்லை என்கிற உணர்வு கொண்ட பெரியவர்கள் இருப்பார்கள். அவர்கள் பெரும்பாலும் இப்படித்தான் புலம்பத்தொடங்குவார்கள்.

இதனாலேயே நிறைய இடங்களில் வீட்டுக்கு வரும் உறவுகள், நட்புகள் அந்த வீட்டிலுள்ள பெரியவர்களை மரியாதையாக ஓரிரு வார்த்தை கேட்டுவிட்டு ஜாக்கிரதையாக நகர்ந்து விடுவார்கள்!

எனக்குத் தெரிந்த நட்பில் ஒருவர் மாதத்துக்கு ஒருமுறை மருத்துவரைப் பார்த்து விடுவார். தேவை இருக்கிறதோ, இல்லையோ... அவரைப் பார்த்து வரிசையாக புகார்கள் சொல்லாவிட்டால் நிமமதியே இருக்காது அவருக்கு. அப்படி மருத்துவரிடம் அழைத்துப் போகாவிட்டால் தங்கள் கதை கந்தல் என்று நண்பரும் மாதமொருமுறை வழக்கமாக செல்லும் மருத்துவரிடம் அழைத்துச் சென்று காண்பித்து விடுவார். மருத்துவரும் காது குடைந்துகொண்டே இவர் சொல்வதை எல்லாம் கேட்டுக்கொள்வார்.

காசு கொடுத்தாலும் காது கொடுத்துக் கேட்பதற்கு ஒரு ஆள் இருக்கிறதே என்கிற நிம்மதி பரவும் இவரிடம்.

என் உறவில் ஒருவர் சற்றே வித்தியாசமானவர். "எப்படி இருக்கீங்க?" என்று கேட்டதும் "நல்லாயிருக்கேன்..." என்று பதில் வரும்.

சில நொடிகள் தாமதித்து "அப்படிதான் சொல்லணும் இல்லையா? ஏதோ நானா இருக்கக் கண்டு இப்படி வளைய வரேன்.... அவ்வப்போது ஜுரம் வருது. பல் வலி... பல் ஆடுது... காலெல்லாம் வலி... தூக்கமே வரமாட்டேங்குது போங்க... எல்லோரும் தூங்கறாங்க.. நான் முழிச்சுக்கிட்டிருப்பேன்..." என்று தொடர்வார்.

பகலெல்லாம் இன்ஸ்டால்மெண்டில் தூங்குபவர். தூங்கியதையும் ஒத்துக்கொள்ள மாட்டார். வயதானால் தூக்கமும், பசியும் குறைவது இயற்கை என்றால் ஏற்றுக் கொள்ள மாட்டார். அவர் மகன் அவரிடம் "இப்படி வந்தவர்களிடம் இப்படியா பேசுவது?

அவர்கள் ஸம்ப்ரதாயமாகத்தானே கேட்டார்கள்? நல்லாயிருக்கேன்னு சொல்லிட்டு நிறுத்த வேண்டியதுதானே? என்ன நினைத்துக் கொள்வார்கள்?"

"போடா... என்னையும் மதிச்சு ஒருத்தர் கேட்கிறார்கள்... என் குறையை நான் யாரிடம்தான் சொல்ல?" என்பார்.

என்னிடம் இப்படி நலம் விசாரிப்பவர்களிடம் நான் இப்படி எதுவும் சொல்வதில்லை - இதுவரை! வயதானால் எப்படியோ!

===

## கதம்பம் :: ஸ்ரீராம்



வீரபாண்டிய கட்டபொம்மனை மற்ற பாளையக்காரர்களின் கண் எதிரே (அவர்களுக்கெல்லாம் எச்சரிக்கையாம்... பயமுறுத்தி வைக்கிறானாம்) கயத்தாறில் புளியமரத்தில் 16-10-1799 ல் தூக்கிலிட்டதும் அந்த ஆங்கிலேய தளபதி மற்ற பாளையக்காரர்களுக்கு ஒரு ஆணை பிறப்பித்தான்.

# மின்நிலா 026

"பாளையக்காரர்கள் யாரும் எந்த விதமான கோட்டையையும் இனி கட்டக் கூடாது. வெடிகுண்டு, துப்பாக்கிகள் முதலிய கருவிகளை யாரும் வைத்திருக்கக் கூடாது. அவற்றை உற்பத்தி செய்யவும் கூடாது.

ஈட்டி, துப்பாக்கி, வேல், வாள், வல்லயம் முதலிய படைக்கலங்களைக் குடிமக்களில் எவரும் வைத்திருக்கக் கூடாது, வைத்திருந்தால் அவருக்கு மரணதண்டனை விதிக்கப்படும். ஒரு ஜமீனிலுள்ள குடி மக்களுடைய நல்ல நடத்தைக்கு அந்த ஜமீன்தாரே பொறுப்பாவார். குடியானவர் யாராவது ஆயுதங்களை வைத்துக்கொண்டு ஆங்கில அரசுக்குத் தொல்லை தந்தால் அவர் கொல்லப் படுவார். அந்தக் குடியானவரை வைத்திருந்த ஜமீன்தாரும் தன் ஜமீனை இழந்து கம்பெனியாரால் தண்டிக்கப் படுவார்"

இது ஜான் பானர்மேன் கயத்தாறில் வைத்து 21-10-1799 ல் பிறப்பித்த ஆணை.

யாருக்கு யார் ஆணை பிறப்பிப்பது?!

அதே சமயம் கட்டபொம்மனுக்கு தூக்கிலிடப்படும் ஆணை பிறப்பிக்கப் பட்டபோதும், குறிப்பிட்ட புளியமரத்துக்கு அழைத்துச் செல்லப் பட்டபோதும் கலங்காத கட்டபொம்மனின் மனோதிடம் பற்றியும், காட்டிக்கொடுத்த மற்ற இரு பாளையக்காரர்களைப் பார்த்த ஏளனப்பார்வை குறித்தும் சென்னை கவர்னர் எட்வர்ட் கிளைவ் என்பவனுக்கு அனுப்பிய அறிக்கையில் உண்மையை மறைக்காமல் சொல்லியிருந்திருக்கிறான் இதே பானர்மேன்.

- படித்துக் கொண்டிருக்கும் புத்தகத்திலிருந்து...

===

இந்தப் படத்துக்கு இன்னும் சில கவிதை முயற்சிகளும் செய்திருந்தேன். ஐந்தை மட்டும் செலெக்ட் செய்து இங்கு பகிர்கிறேன்!

**மின்நிலா 026**



| | |
|---|---|
| ஓடுவதற்குத்<br>தயாராகி விட்டோம்.<br>செல்ல(த்தான்) இடமில்லை.<br>நிற்குமிடம் தெரியவில்லை. | இனி<br>வானில்தான்<br>தேடவேண்டும்<br>மனிதங்களை. |
| இளமை<br>இருக்கும்வரைதான்<br>காதலும் காமமும்..<br>தொலையுமுன்<br>ஓடிவிடுவோம் வா.. | அரிவாளோடு வருமுன்<br>ஆகாயத்தில் கலப்போம்<br>வந்து விடு. |

இதென்ன ஆற்றங்கரையா..

கடற்கரைம்மா...

கல்லே இல்லை..

எப்படித் துவைப்பேன்
உன் துணிகளை?

நீயே வந்து பார்..
வா..

படித்ததிலிருந்து......

## மின்நிலா 026

காகிதத்தைப் பார்த்தால் கழுதைக்குச் சாப்பிடத் தோன்றுகிறது. கவிஞனுக்கோ எழுதத்தோன்றுகிறது.

மனித வாழ்க்கை – கர்ணனுக்குள்ள கையைக் கொடுத்துவிட்டு குசேலனுக்குள்ள பையைக் கொடுத்து விடுகிறான் இறைவன்.

வானம் நமது எல்லையல்ல. நாம் பார்க்கிற நட்சத்திரங்கள் பறித்து விளையாட வேண்டிய பகல்நேரக் கனகாம்பரங்கள்

தன்னைத் தாழ்வாக நினைக்கிறவன் குள்ளமாகிப் போவான். மனிதன் தன்னை நீட்டிக் கொள்ளவேண்டும்; நிமிர்த்திக் கொள்ள வேண்டும்.

–வலம்புரி ஜான்.

வல்லிம்மாவுக்கு பந்தபாசம் படத்திலிருந்து சில பாடல்கள் பிடிக்கும். ஆமாம், அந்தப் படம் எப்படி? அப்போது என்ன விமர்சனம் வந்தது? படிக்க முடிகிறதா?




’அஸ்கு புஸ்கு ... இப்படி எல்லாம் என்னை ஏமாற்ற முடியாது’ என்று சொல்லிக்கொண்டு இந்த வாரம் விடைபெறலாம்!


"அரசே! - எதிரி மன்னன் பலத்தில் தங்களைவிடக் குறைந்தவனாம்...!"

"இப்படிச் சொல்லி என்னை ஏமாத்தவா பார்க்கிறீங்க...? இந்தத் தடவையும் நீங்கதான் போர்முனைக்குப் போறீங்க...!"

- ஆர். அப்துல் சலாம்

[மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்]

## பாட்டும் பதமும் :: ஸ்ரீராம்

**எனது நிலையை எடுத்துச் சொல்ல தூது போ என் கண்ணே**

**ரங்கராட்டினம். 1971 இல் வெளிவந்த படம். சௌகார் ஜானகி தயாரித்து நடித்து தோல்வியடைந்த படம். படம் தவறாக புரிந்து கொள்ளப்பட்டது என்று அப்போது சொன்னாராம் சௌகார். அஸ் யூஷுவல் நான் படம் பார்க்கவில்லை.**

**அதே சமயம் இப்படத்தின் பாடல்களைத் தவற விடவும் இல்லை!**




வி. குமாரின் இசையில் மூன்று நல்ல பாடல்களைக் கொண்ட படம். சௌகாருடன் ஜெமினி, ரவிச்சந்திரன் முதலானோரும் நடித்திருந்த படம்.

இம்மட்டுமே இந்தப் படம் பற்றிய விவரங்கள் அறியக் கிடைக்கின்றன.

இந்தப் படத்தின் பாடல்களை வாலி எழுதி இருக்கக் கூடும்!

முதல் பாடல் முத்தாரமே.. உன் ஊடல் என்னவோ. ஏ எம் ராஜாவும் எல் ஆர் ஈஸ்வரியும் பாடி இருக்கும் இந்தப் பாடல் அப்போது மிகப்பிரபலம். சிலோன் ரேடியோவில் மிக அடிக்கடி ஒலிபரப்பான பாடல்களில் ஒன்று.

முத்தாரமே உன் ஊடல் என்னவோ
சொல்லாமல் தள்ளாடும் உன் உள்ளம் என்னவோ
அத்தானிடம் என் கோபம் செல்லுமோ
அன்றாடும் கொண்டாடும் நம் சொந்தம் கொஞ்சமோ (முத்தாரமே)

ராமன் நெஞ்சிலே சீதை வண்ணமே வாழும் என்று
என் மன்னனோடு நான் சொல்ல வேண்டுமோ இங்கே இன்று
கணவன் மனதிலே களங்கம் கண்டதோ சீதையின் நெஞ்சம்
என் காதல் உறவிலே மாற்றம் காண்பதோ பேதை நெஞ்சம்

பெண்ணல்லவா மனம் போராடுது
நான் சொல்லியும் என் தடுமாறுது (அத்தானிடம்)

தேக்கி வைத்த அணை தாண்டி போகுமோ ஆசை வெள்ளம்
கடல் காத்திருக்குமோ பொங்கும் அல்லவா கண்ணீர் வெள்ளம்
ஓய்வில்லாதபடி ஓடுகின்ற நதி கடலில் சேரும்
காதல் என்னும் நதி பாதை மாறினும் உன்னை சேரும்

உனக்காகவே நான் உயிர் வாழ்கிறேன்
மனக் கண்ணிலும் நான் உனைப் பார்க்கிறேன் (முத்தாரமே)

>>>>> YOUTUBE LINK

**அடுத்து வரும் இரு பாடல்களும் எஸ் பி பி பாடல்கள். முதலாவதாக "ஒரு மல்லிகை மொட்டு"**

**இந்தப் பாடல் குமார் ஒரு ஹிந்திப் பாடலிலிருந்து (ஆரம்ப இசை உட்பட) உருவி இருக்கிறார் என்று தோன்றும் எனக்கு. கட்டிபதங் படப்பாடலான யே ஜோ மொஹப்பத் ஹை பாடல் அப்படியே நினைவுக்கு வரும். நீங்களும் இங்கு தொட்டு**

கேட்டுப்பார்க்கலாம். எனக்கு மிகவும் பிடித்த கிஷோர்-ஆர் டி பர்மன் பாடல்களில் ஒன்று அது.

அதேபோல இந்தப் பாடல் கேட்கும்போதெல்லாம் அலலது இந்தப் படப்பாடல்கள் கேட்கும்போதெல்லாம் தஞ்சை ராஜேந்திரா தியேட்டர் நினைவுகள் வந்துவிடும் எனக்கு!

ஒரு மல்லிகை மொட்டு மழைத்துளி பட்டு
சில்லென பூத்தது இதழ் விட்டு
சில்லென பூத்தது இதழ் விட்டு
அதன் புன்னகை பட்டு தன் மனம் கெட்டு
கொஞ்சிட வந்தது குளிர் காற்று
கொஞ்சிட வந்தது குளிர் காற்று

கோடை மழையில் வாடைக்காற்றில்
குளிரெடுக்கிற மாது
ஆடை கொஞ்சம் விலகி நின்று
அழகைக் காட்டும் போது
தளிர் போன்ற இளமேனி தொடும் ஆசை கொண்டு
குளிராமல் கொதிக்கின்ற மனம் ஒன்று உண்டு

ஊரறிந்த திருடன் என்று பேர் எடுத்ததுண்டு
பொருளுக்காக பொன்னுக்காக திருடப் போனதுண்டு
உடலோடு உருவான பசியொன்று உண்டு
விருந்தாக நீ உன்னை பரிமாறு இன்று

>>>>> YOUTUBE LINK

\

மூன்றாவது பாடல்.

இதுதான் இன்று நான் பகிர நினைத்த பாடல். இதைப் பகிரும் இதே படத்தில் இருக்கும் இன்னும் இரண்டு நல்ல பாடல்களையும் விடுவானேன் என்று மேலே உள்ளஇரண்டு பாடல்களையும் பகிர்ந்து விட்டேன். பாடலின் Bhaaவம் முழுக்க எஸ் பி பியின் குரலில் வெளிப்படும்.

**மின்நிலா 026**

**தங்கத்தொட்டில் பட்டு மெத்தை**
**தாய் வீட்டிலே**
**பாசம் மட்டும் உண்டு எந்தன்**
**தாலாட்டிலே**

**தன்னைத்தானே மறந்திருந்தாள்**
**உன்னை ஈன்ற அன்னை**
**திரும்பி வந்த நினைவிருந்தும்**
**மறந்ததென்ன என்னை**
**இமையை விழிதான் மறப்பதுண்டோ**
**காட்சி வந்த பின்னே**
**எனது நிலையை எடுத்துச் சொல்ல**
**தூது போ என் கண்ணே**

**கண்ணன் வந்தான் நண்பனுக்குத்**
**தேரோட்ட அன்று**
**தந்தை வந்தான் பிள்ளைக்காக**
**காரோட்ட இன்று**
**வானில் உள்ளே தேவன் இந்த**
**விந்தை கண்டு சிரிப்பான்**
**வாழ்ந்து பார்க்க வேளை வந்தால்**
**நம்மை ஒன்று சேர்ப்பான்**

**>>>>> YOUTUBE LINK**

**மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்**

# நேர்மறை செய்திகள்

'கொரோனா தடுப்பூசி நல்ல பலன் அளிக்கிறது'

நியூயார்க் : கொரோனா தடுப்பூசி மருந்து தயாரிப்பு தொடர்பான ஆய்வில் மிகச் சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக, அமெரிக்காவைச் சேர்ந்த, பைசர் நிறுவனம் தெரிவித்துள்ளது.




ஜெர்மனியைச் சேர்ந்த, பயோன்டெக் நிறுவனத்துடன் இணைந்து, பைசர் நிறுவனம், கொரோனா தடுப்பூசி மருந்து தயாரிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.இதற்காக, அமெரிக்கா உள்ளிட்ட ஆறு நாடுகளைச் சேர்ந்த, 44 ஆயிரம் பேரிடம், கொரோனா தடுப்பூசி மருந்து செலுத்தி சோதனை செய்யப்பட்டுள்ளது. அதில், 94 பேருக்கு மட்டுமே தொற்று ஏற்பட்டுள்ளது தெரியவந்தது.



இது குறித்து, பைசர் நிறுவனத்தின் மூத்த துணை தலைவர், பில் கிருபர் கூறியதாவது: கொரோனா தடுப்பூசி ஆய்வு முடிவு நம்பிக்கையூட்டும் விதத்தில் உள்ளது. அடுத்த கட்டமாக, இம்மாத அவசரகால சிகிச்சைக்கு, தடுப்பூசி மருந்து செலுத்த அனுமதி கோரி, அமெரிக்க மருந்து கட்டுப்பாட்டு கழகத்திடம் விண்ணப்பிக்க உள்ளோம்.இவ்வாறு, அவர் கூறினார்.உலகிலேயே, ரஷ்யா தான், முதன் முதலாக கொரோனா தடுப்பூசி மருந்தை தயாரித்த பெருமையை தட்டிச் சென்றது.இந்தியா உட்பட பல நாடுகளைச் சேர்ந்த, 10 நிறுவனங்கள், கொரோனா தடுப்பூசி மருந்து தயாரிப்பு தொடர்பான ஆய்வில், இறுதிக் கட்டத்தில் உள்ளன.அமெரிக்காவைச் சேர்ந்த நான்கு நிறுவனங்களில், ஏதேனும் ஒன்று, ஜனவரியில் தடுப்பூசி மருந்தை வெளியிடும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

====

குழந்தைகள் தின சாதனையாளர்கள் 1 **5 வயது சிறுவன் ஸ்ரீஷ் நிர்கவ்**

மீண்டும் மீண்டும் கின்னஸ் சாதனை ஐந்து வயதில் சென்னை சிறுவன் அபாரம்




சென்னை போரூரைச் சார்ந்த ஐந்து வயது சிறுவன் ஸ்ரீஷ் நிர்கவ் நான்கு மாத இடைவெளியில் இரண்டு கின்னஸ் சாதனை செய்து சாதித்துள்ளான்.

வேலவன் கிருஷ்ணன் மற்றும் தாய் ரோஷ்மி ஆகிய இருவருமே பல் மருத்துவர்கள் இவர்களின் ஒரே மகன்தான் ஸ்ரீஷ்.



சென்னையில் உள்ள தி பப்ளிக் ஈகோ ஸ்கூலில் யூகேஜி படிக்கிறான் இவனுக்கு இரண்டு வயது ஆகும் போதே இவனது அபார ஞாபகசத்தியை கண்டு வியந்த பெற்றோர் அவனது திறமையை வளர்த்தெடுப்பதில் ஆர்வம் காட்டினர்.

உதாரணத்திற்கு சொல்லவேண்டும் என்றால் ஒரு முறை ஒரு கார் லோகோவை பார்த்துவிட்டால் பிறகு அந்த லோகோவை நேரிலோ,புத்தகத்திலோ, டி.வி.,யிலோ என்று எங்கே பார்த்தாலும் சொல்லிவிடுவான்.

இதன் காரணமாக இவனுக்கு நிறைய கார்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்பதற்காகவே சிங்கப்பூர்,ஜப்பான் உள்ளீட்ட நாடுகளுக்கு இவனுடன் பயணம் மேற்கொண்டனர்.

கிட்டத்தட்ட 150 கார்களின் பிராண்டு லோகோக்களை நினைவு படுத்தி சொல்லும் இவனது நினைவாற்றலை நண்பர்கள் உதவியுடன் இந்தியா சாதனை புத்தகத்தில் இடம் பெறச் செய்தனர், இதன் தொடர்ச்சியாக கின்னஸ் சாதனையிலும் இடம் பெற்றான்

கடந்த நான்கு மாதத்திற்கு முன்தான் இந்த சாதனையை நிகழ்த்தினான். இந்த சாதனை தந்த மகிழ்ச்சியில், கிடைத்த பாராட்டில் மகிழ்ந்த சிறுவன் அடுத்து இதே போல

ஏதாவது செய்யவேண்டும் என்று சொல்ல மீண்டும் ஒரு கின்னஸ் சாதனை நிகழ்த்தப்பட்டது.

இந்த முறை ஒரு நிமிடத்தில் ௬௦ கார்ட்டூன் கேரக்டர்களை நினைவுபடுத்தி சொல்லியுள்ளான்.இரு சாதனைகளுமே அதிகாரபூர்வமாக கின்னஸ் நிறுவனத்தால் அவர்களது முகநூல் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.இப்படி ஐந்து வயதிற்குள் அடுத்தடுத்த இரு சாதனை புரிந்த இந்திய சிறுவன் இவனாகத்தான் இருக்கவேண்டும் என்று பெற்றோர் கருதுகின்றனர்.

இவ்வளவு நினைவு ஆற்றல் உள்ளதால் ஸ்ரீஷ் அதிகம் டி.வி.,பார்ப்பனா என்றால் அதுவும் கிடையாது அவனுக்கு பிடித்ததைத்தான் அவன் செய்வான் ஆனால் அதில் அதீத ஈடுபாடு காட்டுவான்.நன்றாக விளையாடுவான்,ஒவியம் வரைவான்,சிறுவர்களுக்கான மாரத்தான்,சைக்கிள் ஒட்டும் போட்டி எல்லாம் அதிகாலை நான்கு மணிக்கு நடந்தாலும் ஆஜராகிவிடுவான்,வீட்டில் சின்ன சின்ன செடிகளை வளர்த்து வருகிறான் சபைக்கூச்சம் என்பது சிறிதும் கிடையாது மகா தைரியமானவன்

இந்த இரண்டு கின்னஸ் சாதனை தந்த ஊக்கம் காரணமாக இப்போது உலக மேப்பை ஆராய்ந்து கொண்டு இருக்கிறான் அதை வைத்து யாரும் சாதிக்காததை சாதிக்க வேண்டும் என்று ஆர்வம் கொண்டுள்ளான்.

இவனது வளர்ச்சியில் எங்களைப் போலவே இவனது பள்ளி தலைமை ஆசிரியை லட்சுமி வெங்கட்,வகுப்பு ஆசிரியைகள் ஸ்டெபி,சரண்யா,கவிதா ஆகியோருக்கும் பங்கு உண்டு என்று மகிழ்ச்சியுடன் கூறும் ஸ்ரீஷ் நிர்கவின் பெற்றோரிடம் பேசுவதற்கான எண்:7550118440.

-எல்.முருகராஜ்

=====

குழந்தைகள் தின சாதனையாளர்கள் 2 : **௬ வயது அர்ஹாம் ஓம் தல்சானியா**

## கம்ப்யூட்டர் புரோகிராமிங்கில் 6 வயது சிறுவன் கின்னஸ் சாதனை:

அகமதாபாத்: ஆறு வயதிலேயே கம்ப்யூட்டர் புரோகிராமை உருவாக்கி உலகிலேயே இளைய வயது கம்ப்யூட்டர் புரோகிராமர் என்ற உலக சாதனை படைத்துள்ளான் குஜராத் மாநிலத்தை சேர்ந்த சிறுவன் ஒருவன்.




இது குறித்து கூறப்படுவதாவது: குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரை சேர்ந்தவர் ஓம் தல்சானியா. இவர் சாப்ட்வேர் இன்ஜியராக பணி புரிந்து வருகிறார். இவரது ௬ வயது மகன் அர்ஹாம் ஓம் தல்சானியா. இவர் ஆறு வயதிலேயே கம்ப்யூட்டர் புரோகிராமை உருவாக்கி உலகிலேயே இளைய வயது கம்ப்யூட்டர் புரோகிராமர் என்ற உலக சாதனை படைத்துள்ளான் இது சிறுவனின் தந்தை கூறியதாவது: அர்ஹாம் சிறுவயதிலேயே கம்ப்யூட்டர் விளையாட்டுகளில் ஆர்வம் கொண்டிருந்தான்.மேலும் புதிர்களை தீர்வு காண பழகினார். தொடர்ந்து அவர் வீடியோ கேம்களை உருவாக்க நினைத்தார். அவரது ஆர்வத்தை கண்ட நான் புரோகிராமிற்கான அடிப்படை கோடிங்கை கற்றுகொடுத்தேன்.




தொடர்ந்து அவர் தன்னுடைய சொந்த முயற்சியால் சிறிய விளையாட்டுகளை உருவாக்க துவங்கினார். தொடர்ந்து மைக்ரோ சபாட் நிறுவனத்தின் அங்கீகாரத்தை பெற்றார். இதனையடுத்து கின்னஸ் சாதனை புத்தகத்திற்கு விண்ணப்பித்தோம் என்றார்.

சிறுவன் அர்ஹாம் கூறியதாவது: 2 வயதான நிலையிலேயே டேப்லெட்டுகளை பயன்படுத்த துவங்கினேன் 3 வயதில் விண்டோஸ் ஓஎஸ் கேஜெட்டுகளை வாங்கினேன். நான் சிறிய விளையாட்டுக்களை உருவாக்கி கொண்டிருந்தேன். சிறிது நாளில் கின்னஸ் நிறுவனம் என்னிடம் இருந்து சான்றுகளை அனுப்ப சொல்லி கேட்டனர் அதன் பின்னர் அவர்கள்ஒப்புதல் அளித்து உலக சாதனை சான்றிதழ்கிடைத்தது. என கூறினான்.

மேலும் வருங்காலத்தில் ஒரு வணிக தொழில் முனைவோராக வர விரும்புவதாகவும், விளையாட்டுக்கள் மற்றும் ஆப்களை , கோடிங் குகளை உருவாக்க விரும்புகிறேன் மேலும் அனைவருக்கும் உதவ வேண்டும் என கூறினான்.

மனு அளித்த மாற்றுத்திறனாளி பெண்ணுக்கு 2 மணிநேரத்தில் பணி ஆணை வழங்கிய முதல்வர்.



தூத்துக்குடி: தூத்துக்குடியில் முதல்வரிடம் வேலை கேட்டு மனு அளித்த மாற்றுத்திறனாளி பெண்ணுக்கு 2 மணி நேரத்தில் முதல்வர் பழனிசாமி பணி ஆணையினை வழங்கினார்.

தூத்துக்குடி சுந்தர் நகர் பகுதியைச் சேர்ந்தவர் மாரீஸ்வரி. இரண்டு கால்களையும் இழந்த மாற்றுத்திறனாளியான இவர், தனக்கு வேலை வேண்டும் என வலியுறுத்தி முதல்வர் பழனிசாமி தூத்துக்குடி வருகை தந்தபோது, தென்பாகம் காவல் நிலையம் அருகே மனு அளிப்பதற்காக நின்றுக்கொண்டிருந்தார். இதனை கவனித்த முதல்வர், அம்மாற்றுத்திறனாளி பெண்ணிடம் கோரிக்கை மனுவை பெற்றுக்கொண்டு, மாவட்ட கலெக்டர் அலுவலகம் வரும்படி அழைத்தார்.



மாரீஸ்வரியின் மனுவினை பரிசீலித்து 2 மணிநேரத்தில் பணி நியமன ஆணையினை முதல்வர் பழனிசாமி வழங்கினார். மாரீஸ்வரிக்கு தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதல்வரின் விரிவான காப்பீடு திட்டத்தின் கீழ் புற ஆதார முறையில் வார்டு மேலாளர் பணி வழங்கி அதற்கான ஆணை வழங்கப்பட்டது. தனக்கு பணி வழங்கிய முதல்வருக்கு நன்றி தெரிவிப்பதாக மாற்றுத்திறனாளி மாரீஸ்வரி தெரிவித்தார்.

===




மாஸ்கோ: கொரோனாவுக்கான ஸ்புட்னிக்-வி தடுப்பு மருந்து 92 சதவீதம் வெற்றி பெற்றுள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது. இடைக்கால பரிசோதனைகளின் அடிப்படையில் ஸ்புட்னிக்-வி பயனுள்ளதாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

தடுப்பு மருந்து சோதனையில் 40க்கும் மேற்பட்ட உலக நிறுவனங்கள் மூன்றாம் கட்ட சோதனை நிகழ்த்திவரும் நிலையில், ஜெர்மனியின் பயான்டெக் நிறுவனமும் அமெரிக்காவின் பைசர் நிறுவனமும் இணைந்து கண்டுபிடித்த தடுப்பு மருந்து 90 சதவீதம் பலன் அளிப்பதாக தெரிவித்துள்ளது. இந்நிலையில், ரஷ்யாவின் 'ஸ்புட்னிக்-வி' என்னும் கொரோனா தடுப்பூசியின் இடைக்கால சோதனை முடிவுகளின்படி, இந்த தடுப்பு மருந்து கொரோனாவிலிருந்து மக்களைப் பாதுகாப்பதில் 92 சதவீதம் பயனுள்ளதாக இருக்கும் என்று அந்நாட்டின் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

ரஷ்யாவைச் சேர்ந்த, தொற்றுநோய்க்கான காமாலேயா தேசிய ஆராய்ச்சி நிறுவனம், 'ஸ்புட்னிக்-வி' என்ற கொரோனா தடுப்பு மருந்தை, கண்டுபிடித்து உள்ளதாக, ஆகஸ்ட், 11ல் வெளியிட்டது. இதை, அதிகாரப்பூர்வ தடுப்பு மருந்தாக, ரஷ்ய சுகாதாரத்துறை அமைச்சகம் பதிவு செய்தது. இதையடுத்து, உலகின் முதல் கொரோனா தடுப்பு மருந்தாக, ஸ்புட்னிக்-வி கருதப்படுகிறது. தற்போது இந்த கொரோனா தடுப்பூசி

இடைக்கால சோதனையின்படி, கொரோனாவிலிருந்து 92 சதவீதம் மக்களைப் பாதுகாப்பதில் பயனுள்ளதாக இருக்கும் என அந்நாட்டு சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

இதற்கிடையில், இந்த ஸ்பூட்னிக்-வி தடுப்பு மருந்தின் 2 மற்றும் 3வது கட்ட மருத்துவ பரிசோதனை நடத்துவதற்கு இந்தியாவை தலைமையிடமாகக் கொண்ட உலகளாவிய மருந்து தயாரிப்பு நிறுவனமான டாக்டர் ரெட்டிஸூக்கு இந்திய மருந்து கட்டுப்பாட்டு ஜெனரல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

===

பரோட்டா மாஸ்டர்

நான், பரோட்டா மாஸ்டர் என்பது, முதலில் சில நாட்களுக்கு கல்லுாரியில் தெரியாமல் இருந்தது. இப்போது, அனைவருக்கும் நன்கு தெரிந்து விட்டது.

இரவு, 10:00 மணி வரை, கடை வேலை இருக்கும். அதன் பின், வீட்டுக்கு வந்து, அன்றைய கல்லுாரி பாடங்களை படித்து முடித்து விட்டு தான் துாங்கச் செல்வேன். ″



மாணவியான நான் பரோட்டா போடுகிறேன்!
கல்லுாரியில் படித்தபடியே, தாய் நடத்தி வரும் ஓட்டலில், பரோட்டா மாஸ்டராக பணியாற்றுவது பற்றி, 20 வயது மெரிண்டா:

″சொந்த ஊர், கேரள மாநிலம் திருச்சூர் அருகே உள்ள கும்பளங்காடு.
என்னுடன் பிறந்தது, இரண்டு அக்கா. 15 ஆண்டுகளுக்கு முன், எங்களையும், அம்மாவையும் அம்போன்னு விட்டுட்டு, அப்பா எங்கோ போய் விட்டார்; ஏராளமான

கடன்களையும் எங்கள் மீது அவர் சுமத்தியிருந்தார். அந்த கடன்களை அடைக்க, அம்மா ரொம்ப கஷ்டப்பட்டார். வீடுகளில் வேலை, ஓட்டல்களில் வேலை என, கையில் கிடைத்த அனைத்து வேலைகளையும் பார்த்தார். அப்போது தான், சிறிய அளவில் ஓட்டல் துவங்கும் எண்ணம் அவருக்கு வந்தது.

எங்கள் ஓட்டல், காலை, 6:00 மணிக்கு துவங்கி, இரவு, 8:00 மணி வரை நடக்கும். சாதம், பரோட்டா, கப்பங்கிழங்கு, மட்டன், சிக்கன், பீப் கிடைக்கும்.

எங்கள் கடையில், பிற வேலைகளை அம்மா செய்து விடுவார். ஆனால், பரோட்டா மாஸ்டராக இருந்த நபருக்கு, தினமும், 800 ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டும். அதை கொடுக்க, மிகவும்சிரமமாக இருக்கும். ஏனெனில், அந்த அளவுக்கு வியாபாரம் பெரிய அளவில் இருக்காது.

அப்போது, நான் கல்லூரியில் சேர்ந்த புதிது. பரோட்டா மாஸ்டரை வர வேண்டாம் என சொல்லி விட்டு, பரோட்டா போடத் துவங்கி விட்டேன்.

அது ஒன்றும் எளிதான பணியாக முதலில் இருக்கவில்லை. 15 கிலோ மைதா மாவை பிசைந்து, துண்டுகளாக உருட்டி, 240 பரோட்டாக்கள் போட வேண்டும். மைதா மாவை பிசையும் போதே கை வலி கொன்று விடும். அதன் பின், அதை வீசி, பரோட்டாவாக சுட்டு எடுத்த பின், சூடாக இருக்கும் போதே அடித்து, துவைத்து போட வேண்டும்.



முதலில் சில நாட்களுக்கு இந்த பணி, மிகவும் கஷ்டமாகத் தான் இருந்தது. அதன் பின் பழகி விட்டது. இப்போது தினமும், காலை, 5:00 மணிக்கு எழுந்து, ஓட்டலுக்கு தேவையான வேலைகளை பார்த்து, பரோட்டாவுக்கு மாவு பிசைந்து வைத்துவிட்டு, பஸ்சை பிடித்து, கல்லூரிக்கு சென்று படித்து விட்டு, மதியம் வந்ததும், நேராக ஓட்டலுக்கு வந்து, பரோட்டா போடத் துவங்கி விடுவேன்.

நான், பரோட்டா மாஸ்டர் என்பது, முதலில் சில நாட்களுக்கு கல்லூரியில் தெரியாமல் இருந்தது. இப்போது, அனைவருக்கும் நன்கு தெரிந்து விட்டது.

இரவு, 10:00 மணி வரை, கடை வேலை இருக்கும். அதன் பின், வீட்டுக்கு வந்து, அன்றைய கல்லுாரி பாடங்களை படித்து முடித்து விட்டு தான் துாங்கச் செல்வேன்.

இப்படி நாங்களே கஷ்டப்படுவதால், ஓட்டல் வருமானம் அதிகரித்துள்ளது. கடன்கள் கொஞ்சம் தீர்ந்துள்ளன.

வாழ்க்கையில் எவ்வளவு பெரிய பிரச்னைகள் வந்தாலும், போராடி ஜெயிக்கலாம் என்பதை என் அம்மாவைப் பார்த்து தெரிந்து கொண்டேன். கடன் இல்லாத வாழ்க்கை வாழவே விரும்புகிறேன்!

தினமலரிலிருந்து.... ஸ்ரீராம்

===

**சுற்றுச்சூழல் மாசுபடுவதை தவிர்க்க. முன்மாதிரியாக ஆட்டோ ஓட்டும் கோடீஸ்வரர்**

திருநெல்வேலி:தமிழகத்தில் எலக்ட்ரிக் வாகனங்களுக்கு அரசு சட்டப்பூர்வமாக அனுமதி வழங்கினால் அவற்றின் உற்பத்தி பெருகுவதோடு, விவசாயத்திற்கான பயன்பாடும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.

டீசல், பெட்ரோல் வாகனங்களால் மாசு பாதிப்பு ஏற்படுவதால் தற்போது எலக்ட்ரிக் வாகனங்களுக்கு வரவேற்பு உள்ளது. முதற்கட்டமான இருசக்கர வாகனங்களுக்கு வரிச்சலுகை அறிவிக்கப்பட்டிருப்பதால் இனி வரும் ஆண்டுகளில் எலக்ட்ரிக் டூவீலர்களின் பயன்பாடு அதிகரிக்க வாய்ப்புள்ளது. அதே நேரத்தில் மூன்று சக்கர எலக்ட்ரிக் வாகனங்களுக்கு இன்னமும் தமிழக அரசு சட்டப்பூர்வமான அனுமதி வழங்கவில்லை.

இந்தியாவில் தமிழகம் தவிர மற்ற அனைத்து மாநிலங்களிலும் எலக்ட்ரிக் வாகனங்களுக்கான வரிவிதிப்பு, பதிவு கட்டணம், சாலைவரிகள் என நிர்ணயித்து சட்டப்பூர்வ அனுமதியளித்து உள்ளன. தமிழகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக எலக்ட்ரிக் வாகனங்களை அனுமதிக்கும் கோப்புகள் போக்குவரத்து துறையில் கிடப்பில் கிடக்கின்றன.




சென்னையில் ஸோகோ சாப்ட்வேர் நிறுவன முதன்மை செயல்அதிகாரியான ஸ்ரீதர்வேம்பு கோடீஸ்வரர் ஆவார். அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர், சீனா என பல்வேறு நாடுகளில் தமது நிறுவனத்தை நடத்திவருகிறார். தற்போது தென்காசி, மத்தளம்பாறையில் நிறுவனத்தை துவக்கி அங்கேயே வசித்துவருகிறார். தமது வளாகத்தில் மேற்கொள்ளும் பணிகளுக்கு சுற்றுச்சூழலை பாதிக்காத எலக்ட்ரிக் ஆட்டோவை ஓட்டிவருகிறார்.

சென்னையில் உள்ள ஸோகோ நிறுவனத்திலும் எலக்ட்ரிக் வாகனங்கள் பயன்படுத்த ப்படுகின்றன. தற்போது மாநகராட்சிகள், விமான நிலையங்கள், சுற்றுலா தலங்களில் மட்டுமே பயன்படுத்தப்படும் எலக்ட்ரிக் வாகனங்களுக்கு அரசு அனுமதியளித்தால் பொதுவான பயன்பாடு அதிகரிக்கும். மாசு பாதிப்பு குறையும்.

கோவையில் மூன்று சக்கர எலக்ட்ரிக் வாகனங்கள் தயாரிக்கும் இகோடைனமிக்ஸ் நிறுவன உரிமையாளரர் விஜயன்சீனிவாஸ் கூறுகையில், எலக்ட்ரிக் வாகனங்களுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கிவிட்டது, அதை பின்பற்றி இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் சட்டப் பூர்வமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் தமிழகத்தில் போக்குவரத்து துறை அதற்கான அனுமதி தரவில்லை. சட்டப்பூர்வமான அனுமதி கிடைத்தால்தான் வாகனங்களை ரோட்டில் ஓட்ட முடியும். எலக்ட்ரிக் வாகனங்கள் வெறும் 4 யூனிட் மின்சாரத்தின் மூலம் 80 கி.மீ.,துாரம் வரை பயணிக்க முடியும். 4 பேர் செல்லும் ஆட்டோ முதல், விவசாயத்திற்கு சரக்குகளை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் வரை தயாரித்துள்ளோம். அதிக எண்ணிக்கையில் வாகனங்களை தயாரித்துவிட்டு அனுமதிக்காக காத்திருக்கிறோம்.

எலக்ட்ரிக் வாகனங்களுக்கு மேற்கொள்ளும் முதலீடும் மிககுறைவாகும். அவற்றை பொது மக்கள் பயன்படுத்த அனுமதித்தால் மட்டுமே மாசு பாதிப்பை முழுமையாக குறைக்க முடியும். நடுத்தர குடும்பத்தினரும் இதனை வாங்கும் வகையில் செலவும் குறைவு என்பதால் அரசு அதற்கான அனுமதியை விரைந்து வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம் என்றார்.

===

குழந்தைகள் தின சாதனையாளர்கள் 3 : **9 வயது இந்திரா அர்ஜூன்**

மாமல்லபுரம்: கல்பாக்கம் பள்ளி மாணவியின் கற்பித்தல் விளக்க முறையை பிரதமர் மோடி சமூக வலைதளமான டுவிட்டரில் பாராட்டினார்.

செங்கல்பட்டு மாவட்டம் கல்பாக்கம் நகரியத்தைச் சேர்ந்த அர்ஜுன் பிரதீப் - அபர்ணா தம்பதியின் மகள் இந்திரா அர்ஜூன் 9. கேந்திரிய வித்யாலயா இரண்டாவது பள்ளியின் 4ம் வகுப்பு மாணவி. கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு ஊரடங்கில் வீட்டில் இருந்த மாணவி அலைபேசி செயலிகளை பயன்படுத்தும் முறைகளை அறிந்து கற்பித்தல் விளக்க முறையை உருவாக்கினார்.

'ஆகுமெண்டல் ரியாலிட்டி' செயலியை பயன்படுத்தி வீடியோ காட்சி முறையில் கற்பித்தல் முறையை உருவாக்கினார்.செயலி இயக்கத்தில் உயிரோட்ட பசு, யானை, புலி உள்ளிட்ட மிருகங்களுடன் இவரே அருகிலிருந்து அவை குறித்து விளக்குவதாக வீடியோ பதிந்துள்ளார். பதிவை டுவிட்டர் யு டியூப் என சமூக வலைதளங்களில் பதிவேற்றினார்.

இதை கடந்த செப். இறுதியில் 'டுவிட்டர்' மூலம் அறிந்த பிரதமர் மோடி சிறுமியின் முயற்சியை பாராட்டி டுவிட்டரில் வாழ்த்தும் தெரிவித்துள்ளார்.



மாணவி இந்திரா கூறியதாவது: விர்ச்சுவல் ரியாலிட்டி அலைபேசி செயலி பயன்படுத்த ஆர்வம் உண்டு. ஆகுமெண்டல் ரியாலிட்டி ஆப்பை அறிந்து அதன் மூலம் கற்பித்தல் முறையை உருவாக்கினேன். புத்தக படிப்பைவிட காட்சி முறையில் எளிதில் விளக்கலாம் என்பதால் இதை உருவாக்கினேன். நான் உருவாக்கியதை பிரதமர் மோடி டுவிட்டரில் கவனித்து என்னை வாழ்த்தினார். அவருக்கு நன்றி. நம் எலும்புக் கூட்டை விளக்கும் வீடியோவை தற்போது உருவாக்கியுள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.

[மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்]

# மைசூர் காட்சிகள் மேலும் சில

**சுதந்திரப்பறவை !**




பறவைகளைப் பார்த்து
மரக்கிளைகளும் பறக்க ஆசைப்
படுகின்றனவோ?

அம்மா, அப்பா - நான் ஒளிஞ்சுகிட்டு இருக்கேன் என்னைக் கண்டுபிடிங்க!



இருடா ! வீட்டுக்கு ஓடு மாற்றிவிட்டு வருகிறேன் ---



ஓடு மாற்றி முடிக்கும் வரை கொஞ்சம் தூங்குடா கண்ணா



எங்க குடும்ப குரூப் போட்டோ எங்களுக்கும் ஒரு காப்பி அனுப்புங்க சார்.



" ஆமாம் இவங்க இருக்கறது எல்லாம் ஓட்டு மேல - ஒவ்வொன்றும் என்ன அலட்டல் ---- ஹூம் இதெல்லாம் - - - "



" டேய் ஜிம்மி - என்ன சொன்னே? இப்போ கீழே இறங்கி வரவா? "



## மின்நிலா 026

**" சரி சரி எல்லோரும் சண்டை போடாமல், சந்தோஷமா இயற்கையை இரசிக்கக் கத்துக்குங்க ----- கா கா கா "**



**இங்கே குடி கொண்டுள்ளது இயற்கை எழில் !**




மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

மின்நிலா 026

## உங்களைப்பற்றி நீங்கள் ...

வாரம் ஒரு வலைப்பதிவர்/ வாசகர் என்ற தலைப்பில், எங்கள் ப்ளாக் வாசகர்கள் எழுதுகின்ற வலைப்பூக்கள் பற்றி மின் நிலாவில் அடுத்த வாரத்திலிருந்து எழுத இருக்கிறோம்.

வலைப்பூவர்களும், வலைப்பூவையர்களும், வலைமொட்டுகளும் வாசகர்களும் தங்கள் பெயர், வலைப்பூ பெயர், வலைப்பூ சுட்டி ஆகிய விவரங்களுடன், தங்கள் வலைப்பூவில் எந்த விஷயங்களுக்கு அவர்கள் முன் உரிமை கொடுத்து எழுதுகிறார்கள் , என்பதையும், அவர்களை எழுத வைப்பது எது - அல்லது 'நான் ஏன் எழுதுகிறேன்' என்ற தலைப்பில் அவர்களைப் பற்றிய ஒரு சுயபுராணமும் எழுதி, அதை

engalblog@gmail.com

என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

வலைப்பூ நடத்தாத எங்கள் ப்ளாக் வாசகர்கள், அவர்களைப் பற்றியும், அவர்களுடைய படிக்கும் ஆர்வம் மற்றும் எழுதும் ஆர்வம் குறித்தும் எழுதி அனுப்பலாம்.

எங்களுக்கு வந்து சேரும் அதே வரிசையில், வாரம் ஒருவர் பற்றிய விவரங்களை வெளியிடுகிறோம்.
எங்கள் ப்ளாக் ஆசிரியர்கள் குழு.

இந்த மின்நிலா இதழ் பற்றிய உங்கள் கருத்துகளை,
engalblog@gmail.com
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் !



